**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்**

அசல் வழக்கு எண்.167/2020

**DW1**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.வீரராகவன் | த/பெ.திரு.வீராசாமி | நாள்.22.07.2026 |

பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய சொத்தை அவர்கள் சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.285/18பி. இந்த சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் அப்பா கிரையம் வாங்கிய சொத்து ஆகும். எனது அப்பா பெயர் வீராசாமி நாயுடு. எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 1985ம் வருடம் கிரையம் வாங்கினார்.

2. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1ல் சர்வே எண்.285/18பி உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. பி.வா.சா.ஆ.1 ல் சர்வே எண் இல்லை என்றால் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ல் விஸ்தீரணம் இல்லை என்றால் சரியல்ல, விஸ்தீரணம் 4 செண்ட் உள்ளது. ஆதியில் சர்வே எண்.285/18பி சர்க்கார் கிராம நத்தம் என்றால் எனக்கு கிராம நத்தம் கிராம மனை.

3. என் அப்பாவுக்கு யார் கிரையம் செய்தார் என்றால் கன்னம்மாள் என்பவர் கிரையம் செய்து கொடுத்தார். கன்னம்மாளுக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கன்னம்மாள் பெயரில் கிராம நத்தம் பட்டா உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கன்னம்மாளுக்கு எந்த ஆவணத்தின் முன்னிலைக்கு பாத்தியது என்று

சொல்லி எனது அப்பா கிரையம் வாங்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

*4.* கன்னம்மாள் உண்மையில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் அப்பாவிற்கு கிரையம் செய்திருந்தால் கன்னம்மாள் பெயரில் ஆவணம் இருந்திருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மதுராந்தகம் உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.*153/2017* தாக்கல் செய்யும் காலத்தில் சர்வே எண்.*285/18* என்றால் *285/18* எ அவர்களுடையது, சர்வே எண்.*285/18* பி எங்களுடையது. வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலேயே உட்பிரிவு ஆன சர்வே எண்.*285/18* எ, *285/18* பி ஆன விஷயம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் இருக்கலாம்.

*5.* பதில்உரையை எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார் என்றால் *19.12.2018* ல் பதில் உரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் பெயரில் எந்த வருடம் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பட்டா எத்தனை வருடங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் எனது அண்ணன் மகன் தயாளன் பெயரில் பட்டா வாங்கப்பட்டது. அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அல்லது பின்பு பட்டா வாங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

*6.* *19.12.2018* பதில் உரையில் வீரராகவன் பெயரில் பட்டா தாக்கல் செய்யப்பட்ட விஷயம் சொல்லவில்லை என்றால் பதில் உரையில் சொல்லாமல் இருந்திருக்கலாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.*4* ல் அடங்கல் கணக்கில் ரயத்துவாரி அல்லது சர்க்கார் என்று கண்டுள்ளதா என்றால் உள்ளது. அதற்கு கீழே என்ன உள்ளது என்றால் சா–னு

உள்ளது. அதற்கு விளக்கம் என்ன கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சா என்றால் சர்க்கார் என்று கொடுக்கப்பட்டுள்ளது.

7. நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் பட்டா எப்போது கொடுக்கப்பட்டது என்ற விஷயம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிராம நத்தத்தில் இரண்டு வகைபாடு உள்ளது ஒன்று சர்க்கார் மற்றொன்று ரயத்துவாரி அது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சர்க்காருக்கு பாத்தியப்பட்ட கிராம நத்தத்தில் கிரையம் எழுத முடியாது என்ற விஷயம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. பி.வா.சா.ஆ.1 ல் 1955 கன்னம்மாள் எனது அப்பா பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட கிரையப் பத்திரம் செல்லாது மேற்படி கன்னம்மாளுக்கு கிரையப் பத்திரம் எழுத உரிமையில்லை என்றால் 1955 ல் நான் பிறக்கவில்லை, அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 09.2.2026 தேதியிட்ட அடங்கல் கணக்கு யார் வாங்கியது என்றால் எனது அண்ணன் மகன் வாங்கினார். தலைமையிடத்து துணை வட்டாட்சியர் முத்திரையில் கையெழுத்து போடும் இடத்தில் தேதி இல்லை என்றால் சரிதான்.

9. பி.வா.சா.ஆ.3 ல் பட்டா எண்.457 வீராசாமியின் மகன் வீரராகவன் பெயரில் உள்ளதா என்றால் எனது பெயரில் உள்ளது. குறிப்பு G.O.Ms உள்ளதா என்றால் சரிதான். 04.05.2023 வரை பட்டா உட்பிரிவு செய்யப்படாமல் சர்வே எண்.285/18 உள்ளதா என்றால் சரியல்ல, சர்வே எண்.285/18 பி என்று தான் உள்ளது. குறிப்பாணையில் கடைசி வரியில்

29.4.2024 அன்று *Digitally signed Zonal Officer* பட்டா உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் 03.06.2026 அன்று தேதி உள்ளதா என்றால் சரிதான். அந்த பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தவற்கு பின்பு தான் மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்துளளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யும் வரை என் பெயரில் பட்டா உள்ளதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

11. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 புல வரைபடத்தில் சர்வே எண்.285/18 எ, 285/18 பி உள்ளது என்றால் சரிதான். புல வரைபடம் எந்த தேதி 06.02.2026 வாங்கப்பட்டது என்றால் சரிதான். புல வரைபடத்தில் தாவா உட்பிரிவு செய்யப்பட்டது பற்றி சர்வேஎண்.285/18 எ, 285/18 பி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புல வரைபடத்தில் உட்பிரிவு செய்தால் 8 எ ரிஜிஸ்டரில் குறிப்பிடப்படும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 8 எ கோப்புகளை வரவழைத்து பார்த்தால் 285/18 எ, 285/18 பி எப்போது உட்பிரிவு ஆனது பற்றி தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

12. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் வாதிகளின் பெயரில் உள்ளது. சர்வே எண்.285/18 என உள்ளது எ, பி இல்லை என்றால் சரிதான்.

தாவா சொத்து எ ஷெட்டியூல் சொத்து சர்க்காருக்கு சொந்தமானது என்றால் கிராம நத்தம் மனையாகும். சர்க்கார் கிராம நத்தம் 2வது வாதி மல்லிகா பெயரிலும், சந்திரா பெயரிலும், சொக்கம்மாள் பெயரிலும் அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பட்டா என்றால் தெரியாது. அந்த ஒப்படைவு பட்டாவின் அடிப்படையில் தான் கிராம நத்தம் பட்டா வாதியின் பெயரில் முறையாக வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13. பி அட்டவணை சொத்து காலியாக தான் உள்ளது என்றால் வேலி போட்டு காலியாக தான் உள்ளது. எனது அப்பா கிரையம் வாங்கும் காலத்தில் சென்னை முகவரி உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா வீராசாமி பெயரில் எந்த காலத்திலும் பட்டா இல்லை என்றால் பட்டா இருந்தது. எந்த வருடத்தில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா தாவா சொத்தை அனுபவித்தது இல்லை என்றாலும் எனது அப்பா பெயரில் பட்டா இல்லை என்றாலும் சரியல்ல.

14. என்னுடைய வசிப்பிடம் சென்னை கோடம்பாக்கம், 7வது தெரு என்றால் சரிதான். நான் எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவித்தது இல்லை என்றாலும் எனது பெயரில் பட்டா இல்லை என்றால் என் பெயரில் பட்டா வந்தது பற்றி எனக்கு தெரியாது, நான் தான் அனுபவித்து வருகிறேன். பட்டா அடங்கல் நான் வாங்கவில்லை என்றால் எனது அண்ணன் மகனுடன் சென்று வாங்கினேன். அரசால் எந்த காலத்திலும் கிராம நத்தத்தில் என் பெயரிலும் பட்டா கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்க்கார் நத்தம் புறம்போக்கில் நீட்டனுபோகம் காலம் வசித்தால் மட்டுமே

அரசு பட்டா வழங்கும் என்றாலும் நான் அவ்வாறு வசிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

15. சர்க்கார் கிராம நத்தத்தில் பட்டா வழங்க வேண்டும் என்றால் அங்கு வீடு கட்டி குடியிருக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 முன்னிலைக்கு எனது அப்பாவிற்கு கிரையம் செய்த கன்னம்மாளுக்கு உரிமை இல்லாத போது என் அப்பாவிற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3,4 மற்றும் 5 கடந்த 29.04.2024 க்கு பிறகு வருவாய் துறை அதிகாரியிடம் செல்வாக்கை பயன்படுத்தி சர்வே எண் உட்பிரிவு பெற்றோம் என்றால் சரியல்ல.

16. பி.வா.சா.ஆ,3, 4 மற்றும் 5 உண்மை தன்மையை கண்டறிய தாசில்தாரை நீதிமன்றத்திற்கு வரவழைத்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து பி அட்டவணை பொறுத்து உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. பி.வா.சாஆ.6 முதல் 8 வரையான ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல.

17. தாவா சொத்து ரயத்துவாரி மனை அல்ல என்பதால் தாவா சொத்து குறித்து வில்லங்க சான்றிதழ் மற்ற கிரைய ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல, எனது பெயரில் வி.ஏ.ஓ அடங்கல் பட்டா கொடுக்கமுடியாது. தாவா எ மற்றும் பி அட்டவணை சொத்து குறித்து வாதிகளின் பெயரில் அரசாங்கம் ஒப்படைவு பட்டாவில் நிபந்தனையின் படி தான் வாதிகளின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல,

அரசாங்கம் என் பெயரில் தான் சரியான ஆவணங்களின் அடிப்படையில் தான் பட்டா வழங்கப்பட்டது.

18. வழக்குக்கு பிறகு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் தாவா சொத்துக்கு சம்மந்தம் இல்லை என்றாலும் வழக்குக்கு எதிர்வியாஜ்ஜியம் செய்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.
மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
DM Cum JM
Cheyyur